# தலைக்குள் ஓர் உலகம்

முன்னுரை :

சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன் என்பதாகும். இவர் சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், அறிவியல் புனைவுக்கதைகள், திரைப்படக் கதை, வசனம் எனப் பலதுறைகளில் பணியாற்றியுள்ளார்.

மூளையின் அமைப்பு :

மூளை முதுகுத்தண்டில் இருந்து முளைக்கிறது. முதுகுத்தண்டிலிருந்து மடிப்பு மடிப்பாக முட்டைக்கோஸ் இலைகள் வருவது போல இதை மூன்று பாகங்களாக மேம்போக்காகப் பிரிக்கின்றனர். அவை உள்மூளை, நடுமூளை, பின்மூளை. முன்மூளையில் மூக்கு கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. உணர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது. உடம்பிலுள்ள சிறு மூளைதான் நம் அசைவுகளையும் உணர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

மூளையின் உணவு :

மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி குருதி தேவைப்படுகிறது. தனக்கான ஆற்றலைச் சேகரித்து வைக்க அதற்கு இடமும் இல்லை. அதனால் அதற்குக் குருதியோட்டம் எப்போதும் இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

மூளையின் வலதும் இடதும்

மூளையின் வலப்பகுதி ஆக்கிரமிப்பு இருப்பவர்கள் நடிகர்கள், பாடகர்கள், நடனக் கலைஞர்கள் முதலிய துறைகளில் சிறந்து விளங்குவர். இடப்பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் உள்ளவர்கள் பட்டயக் கணக்கர், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள் முதலிய துறைகளில் சிறந்து விளங்குவர். இடதும் வலதும் சரியான அளவில் கலந்து இருப்பவர்களும் உண்டு.

மூளையும் அன்றாட நிகழ்வுகளும் :

சுமார் தொண்ணூறு நிமிடங்களுக்கு ஒருமுறை நாம் எல்லோரும் மனநிலை மாறுகிறோம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். கொஞ்ச நேரம் சுறுசுறுப்பு, கொஞ்ச நேரம் பகல்கனா, இப்படித்தான் நாம் மாறிமாறி வாழ்கிறோம். பகலிலும் சரி இரவிலும் சரி இந்நிலை தொடரும்.

முடிவுரை:

கற்க கற்க நம் நியூரான்களின் இணைப்புச் சிக்கல்கள் அதிகமாகிக்கொண்டே வருகின்றன. மூளையின் எடை கொஞ்சம் கூடுகிறது. அதில் உள்ள புரோட்டின் அளவு அதிகரிக்கிறது. கற்பது, அனுபவ அறிவு ஆகியவை மூளையின் பல பகுதிகளைப் பாதிக்கிறது என்பது மட்டும் உறுதி.